**<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,</u>**
**<u>SIRKALI</u>**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**CC No.39/2021**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | Latha | Prosecution | P.W- 1, L.W-1 |
| Father Name | Sadhasivam | Defence | |
| Village | Neithavasal | Taluk | |
| Calling | | Religion | |
| Age | 52/2024 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day

**23.05.2024.**

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் மேற்படி முகவரியில் வசித்து வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். கடந்த 31.5.2019 ம் தேதி காலை 8.30 மணியளவில் திருவெண்காடு கடைத்தெருவிற்கு செல்வதாக கூறி என் கணவருக்கு சொந்தமான இருசக்கர வாகனத்தில் திருவெண்காடு சென்றுவிட்டு திரும்பி லிங்கத்தடி திடல் அருகே வந்து கொண்டிருந்தபோது மினி டெம்போ நான்கு சக்கர வாகனம் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி என் கணவர் சென்ற அதே திசையில் வந்த டெம்போ என் கணவர் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியதாக நேரில் பார்த்த எனது ஊரைச் சேர்ந்த ராஜேந்திரன் என்பவர் போன் மூலமாக தகவல் கூறினார். தகவல் கிடைத்ததும் சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தபோது வலது கால், வலது கை, தலை, மற்றும் கண் ஆகிய இடங்களில் பலத்த அடிபட்டிருந்தது. அவரை பயனியர் ஆட்டோவில் ஏற்றி பூம்புகார் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு கொண்டு சென்றேன். அங்கு முதலுதவி சிகிச்சை மட்டும் செய்துவிட்டு அங்கிருந்து தஞ்சாவூர் மீனாட்சி மிஷன் மருத்துவமனைக்கு கொண்டு சென்றேன். அங்கு 10 நாடகள் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தார். பின்னர் மருத்துவமனையிலிருந்து விடுவிப்பு செய்து வீட்டிற்கு வந்து உடல்நிலை சரியில்லாமல் இருந்தார். பின்னர் கை, கால் விளங்காமல் போனதால் மீண்டும் 15 நாட்கள் கழித்து தஞ்சாவூர் மீனாட்சி மிஷன்

மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு சென்றேன். மீண்டும் அவருக்கு உடல்நிலை சரியில்லாமல் போனதால் மேல்சிகிச்சைக்காக சென்னை ராஜிவ் காந்தி மருத்துவமனைக்கு பரிந்துரை செய்தனர். அங்கு ஒரு வார காலம் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தார். பின்னர் சிகிச்சை பலனின்றி 7.7.2019 ம் தேதியன்று என் கணவர் இறந்துவிட்டார். இந்த விபத்தினை ஏற்படுத்தியது யாரென்று எனக்கு தெரியாது. தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**மறுவிசாரணை இல்லை.**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**
**SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**CC No.39/2021**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | Rajendiran | Prosecution | P.W- 2, L.W-2 |
| Father Name | Ganesan | Defence | |
| Village | Neithavasal | Taluk | |
| Calling | | Religion | |
| Age | 55 /2024 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day
**23.05.2024.**
சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் மேற்படி முகவரியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். கடந்த 2019 ம் வருடம தேதி மாதம் நினைவில்லை. ஒருநாள் காலை 8.30 மணியளவில் திருவெண்காடடிற்கு வேலைக்கு செல்வதற்காக லிங்கத்தடி திடல் அருகே சென்று கொண்டிருந்தபோது, சதாசிவம் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி XL வாகனத்தில் வந்து கொண்டிருந்தார்.Tata ace நான்கு சக்கர வாகனம் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி அதே அதே திசையில் சென்ற சதாசிவத்தின் இருசக்கர வாகனத்தின் பின்புறமாக மோதி விபத்தை ஏற்படுத்தியதில் சதாசிவம் வயலில் சென்று விழுந்துவிட்டார். நான் பார்த்தபோது வலது கால், வலது கை, தலை, மற்றும் கண் ஆகிய இடங்களில் பலத்த அடிபட்டிருந்தது. சதாசிவத்தின் மனைவிக்கு போன் மூலம் விபத்து பற்றி தகவல் சொன்னேன். அவரை பயனியர் ஆட்டோவில் ஏற்றி சிகிச்சைக்காக அவரது மனைவி பூம்புகார் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு கொண்டு சென்றார். உடன் நானும் சென்றேன். அங்கு முதலுதவி சிகிச்சை மட்டும் செய்துவிட்டு அங்கிருந்து தஞ்சாவூர் மீனாட்சி மிஷன் மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். அங்கு 10 நாடகள் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தார். பின்னர் மருத்துவமனையிலிருந்து விடுவிப்பு செய்து வீட்டிற்கு வந்து உடல்நிலை சரியில்லாமல் இருந்தார். பின்னர் கை, கால் விளங்காமல் போனதால்

மீண்டும் 15 நாட்கள் கழித்து தஞ்சாவூர் மீனாட்சி மிஷன் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு சென்றோம். மீண்டும் அவருக்கு உடல்நிலை சரியில்லாமல் போனதால் மேல்சிகிச்சைக்காக சென்னை ராஜிவ் காந்தி மருத்துவமனைக்கு பரிந்துரை செய்தனர். அங்கு ஒரு வார காலம் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தார். பின்னர் சிகிச்சை பலனின்றி 7.7.2019 ம் தேதியன்று சதாசிவம் இறந்துவிட்டார். இந்த விபத்தினை ஏற்படுத்தியவரையும், விபத்திற்கு காரணமானவரையும் எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**மறுவிசாரணை இல்லை.**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**
**SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**CC No.39/2021**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | Mahalingam | Prosecution | P.W- 3, L.W-3 |
| Father Name | Govindaraj | Defence | |
| Village | Neithavasal | Taluk | |
| Calling | | Religion | |
| Age | 72/2024 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day

**23.05.2024.**

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் மேற்படி முகவரியில் வசித்து விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். கடந்த 2019 ம் வருடம் தேதி மாதம் நினைவில்லை. ஒருநாள் காலை 8.30 மணியளவில் அ.சா.2 திருவெண்காட்டிற்கு வேலைக்கு செல்வதற்காக லிங்கத்தடி திடல் அருகே சென்று கொண்டிருந்தபோது, சதாசிவம் ஓட்டி வந்த இருசக்கர வாகனத்தின் மீது டெம்போ வாகனம் மோதி விபத்தினை ஏற்படுத்தியதாக சதாசிவத்தின் மனைவி லதாவிற்கு ராஜேந்திரன் தொலைபேசியில் தகவல் சொன்னபோது லதா வீட்டிற்கு அருகில் நான் இருந்ததால் தகவல் கேட்டு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். உடலில் பலத்த காயங்கள் ஏற்பட்டு மோசமான நிலையில் இருந்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**மறுவிசாரணை இல்லை.**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**
**SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**CC No.39/2021**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | Senthil | Prosecution | P.W- 4, L.W-5 |
| Father Name | Muniyandi | Defence | |
| Village | Thiruvenkadu | Taluk | |
| Calling | | Religion | |
| Age | 38/2024 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day

**23.05.2024.**

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் மேற்படி முகவரியில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். கடந்த 2019 ம் வருடம் தேதி மாதம் நினைவில்லை. ஒருநாள் மதியம் 2.30 மணியளவில் லிங்கத்தடி திடல் அருகே மோகன் வயலுக்கு பக்கத்து வயலில் நான் வேலை செய்து கொண்டிருந்தபோது, திருவெண்காடு போலிசார் என்னை விசாரித்து படம் வரைந்து எழுதிக்கொண்டார்கள் , தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள கையொப்பங்களில் 2 வது கையொப்பம் என்னுடையது. **அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்கண்ட கையொப்பத்தினை விபத்து நடந்த இடத்திலேயே வைத்து செய்து கொடுத்தேன். என்னோடு மற்றொரு சாட்சி கையொப்பம் செய்தவர் சின்ன பெருந்தோட்டத்தை சேர்ந்த கலியமூர்த்தி ஆவார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**மறுவிசாரணை இல்லை.**